**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.62/2020**

**Prosecution Witness : 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : வாசவி | **Caste** | : |
| **Father's Name** | : பெஞ்சமின் | **Calling** | : மருந்தாளுநர் |
| **Village** | : **RM** காலனி | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : **60** |
| | | **Dated** | : **17.02.2026** |

**17.02.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–1 **திருமதி. வாசவி** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.1** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி மற்றொரு வழக்கில் நீதிமன்ற காவலில் உள்ளார்.**
**முதல் விசாரணை**

நான் திண்டுக்கல் RM காலனி 11 வது தெருவில் குடியிருந்து செயிண்ட் ஜோசப் மருத்துவமனையில் மருந்தாளுனராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.07.2019ம் தேதி இரவு 9.30 மணியளவில் நானும் எனது கணவர் பெஞ்சமின் என்பவரும் RM காலனி வீட்டில் இருந்து அஞ்சலி ரவுண்டானா அருகில் உள்ள பாலாஜி பவன் கடைக்கு டிபன் சாப்பிடுவதற்காக இருசக்கர வாகனத்தில் TN 57 BD 5024 Susuki Assess வாகனத்தில் எனது கணவர் ஓட்ட நான் பின்னால் அமர்ந்து MVM காலேஜ் வழியாக சித்தேஷ்கார் கம்பெனி அருகே வந்தபோது எங்களுக்குப் பின்னால் இருசக்கர வாகனத்தில் இரண்டு பேர் வந்தார்கள் அதில் பின்னால் அமர்ந்து வந்த நபர் என்னுடைய கழுத்தில் அணிந்திருந்த 10

பவுன் தாலி செயினை அக்க முயற்சி செய்தார். நான் செயினை இருக்க பிடித்துக் கொண்டேன். அதில் நாங்கள் இருவரும் இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்துவிட்டோம். எனது கையில் எனது தாலிச் செயினின் ஒரு பகுதி இருந்தது. மறு பகுதியை இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்திருந்த நபர் அத்துச் சென்றுவிட்டார்.

எனது கையில் இருந்த நகை மற்றும் தாலியில் அணிந்திருந்த குண்டுகள் இருந்தன. அதன் எடை 36 கிராம் இருந்தது. எதிரிகள் முகம் இருட்டில் தெரியவில்லை. அவர்களுக்கு 30 வயதிற்குள் இருக்கலாம். மறுநாள் காலை காவல் நிலையத்தில் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. **(புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** நகையை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக் கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகையைத்தான் நான் மனு தாக்கல் செய்து பெற்றுக் கொண்டேன். (**சிடியுடன் கூடிய புகைப்படம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ஆஜர் எதிரியை எனக்குத் தெரியாது. நான் பார்த்தது இல்லை. நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்களைத்தான் போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை – இல்லை</u>**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.02.17 10:22:08 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.62/2020**

**Prosecution Witness : 5**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சிவானந்தம் | **Caste** | : |
| **Father's Name** | : பரமசிவம் | **Calling** | : டிரைவர் |
| **Village** | : பன்றிமலை | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 38 |
| | | **Dated** | : 17.02.2026 |

**17.02.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–5 **திரு. சிவானந்தம்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.5** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி வேறொரு வழக்கில் நீதிமன்ற காவலில் உள்ளார்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் திண்டுக்கல் பன்றிமலையில் குடியிருந்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது. கடந்த 28.07.2019ம் தேதி காலை 11.00 மணிக்கு திருச்சி- திண்டுக்கல் ரோட்டில் உள்ள சித்தேஷ்கார் கம்பெனி அருகே நானும், சுரேஷ் என்பவரும் நின்று கொண்டிருந்தபோது போலீசார் மேப் வரைந்து எங்களிடம் சாட்சியாக இருக்கும்படி கையொப்பம் பெற்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல. தட்டச்சு செய்யப்பட்ட தாளில்தான் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை – இல்லை</u>**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.02.17 10:22:15 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.62/2020**

**Prosecution Witness : 4**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சுரேஷ் | **Caste** | : |
| **Father's Name** | : முருகன் | **Calling** | : டிரைவர் |
| **Village** | : பிள்ளையார்நத்தம் | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 38 |
| | | **Dated** | : 17.02.2026 |

**17.02.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 6 **திரு. சுரேஷ்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.4** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி வேறொரு வழக்கில் நீதிமன்ற காவலில் உள்ளார்.**
**முதல் விசாரணை**

நான் திண்டுக்கல் பன்றிமலையில் குடியிருந்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது. கடந்த 28.07.2019ம் தேதி காலை 11.00 மணிக்கு திருச்சி- திண்டுக்கல் ரோட்டில் உள்ள சித்தேஷ்கார் கம்பெனி அருகே நானும், சிவானந்தம் என்பவரும் நின்று கொண்டிருந்தபோது போலீசார் மேப் வரைந்து எங்களிடம் சாட்சியாக இருக்கும்படி கையொப்பம் பெற்றார்கள்.(**பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல. தட்டச்சு செய்யப்பட்ட தாளில்தான் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை – இல்லை</u>**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.02.17 10:22:21 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.62/2020**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : ஜான்பீட்டர் | | **Caste** | : | |
| **Father's Name** | : தாமஸ் | | **Calling** | : | தனியார் நிறுவன ஊழியர் |
| **Village** | : ஒட்டன்சத்திரம் | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | **32** |
| | | | **Dated** | : | **17.02.2026** |

**17.02.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–4 **திரு.ஜான்பீட்டர்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.2** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி வேறொரு வழக்கில் நீதிமன்ற காவலில் உள்ளார்.**
**முதல் விசாரணை**

நான் திண்டுக்கல் ஒட்டன்சத்திரத்தில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். கடந்த 2019ம் வருடம் அட்சுதா பள்ளியில் உதவி மேலாளராகப் பணிபுரிந்து வந்தேன். கடந்த 27.07.2019ம் தேதி இரவு 09.30 மணிக்கு எங்களது பள்ளியில் நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்த பெஞ்சமின் என்பவரும் அவரது மனைவியும், டிபன் சாப்பிடுவதற்காக திருச்சி- திண்டுக்கல் ரோட்டில் சித்தேஷ்கார் கம்பெனி அருகே இருசக்கர வாகனத்தில் சென்றபோது அவர்களுக்குப் பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்களில் இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்திருந்த நபர் பெஞ்சமின் மனைவி வாசவி அணிந்திருந்த

தங்க தாலி செயினை அத்துக் கொண்டு செல்ல முயற்சி செய்துள்ளார். அப்போது வாசவி செயினை இருக்கி பிடித்துள்ளார். அதில் தடுமாறி இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்துவிட்டனர். இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்களில் அத்துக் கொண்டு சென்ற நகை போக மீதி நகையை வாசுகி கையில் இருந்ததாகவும், எனக்கு போன் மூலம் பெஞ்சமின் தகவல் சொன்னார். நான் அவரிடம் இது பற்றி விசாரித்தேன். பின்பு காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சொன்னேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை இல்லை.

**<u>மறு விசாரணை – இல்லை</u>**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.02.17 10:22:29 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.62/2020**

**Prosecution Witness : 3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : ராஜசேகரன் | **Caste** | : |
| **Father's Name** | : மோகன்தாஸ் | **Calling** | : மேலாளர் |
| **Village** | : ஜேஜே நகர் | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 40 |
| | | **Dated** | : 17.02.2026 |

**17.02.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–3 **திரு.ராஜசேகரன்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.3** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி வேறொரு வழக்கில் நீதிமன்ற காவலில் உள்ளார்.**
**முதல் விசாரணை**

நான் திண்டுக்கல் ஜேஜே நகரில் குடியிருந்து அட்சுதா பள்ளியில் டிரான்போர்ட் பிரிவில் மேலாளராக வேலை செய்து வந்தேன். கடந்த 27.07.2019ம் தேதி இரவு 09.30 மணிக்கு எங்களது பள்ளியில் நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்த பெஞ்சமின் என்பவரும் அவரது மனைவியும், டிபன் சாப்பிடுவதற்காக திருச்சி- திண்டுக்கல் ரோட்டில் சித்தேஷ்கார் கம்பெனி அருகே இருசக்கர வாகனத்தில் சென்றபோது அவர்களுக்குப் பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்களில் இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்திருந்த நபர் பெஞ்சமின் மனைவி வாசுகி அணிந்திருந்த தங்க தாலி செயினை அத்துக் கொண்டு

செல்ல முயற்சி செய்துள்ளார். அப்போது வாசுகி செயினை இருக்கி பிடித்துள்ளார். அதில் தடுமாறி இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்துவிட்டனர். இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்களில் அத்துக் கொண்டு சென்ற நகை போக மீதி நகையை வாசுகி கையில் இருந்ததாகவும், எனக்கு போன் மூலம் பெஞ்சமின் தகவல் சொன்னார். நான் அவரிடம் இது பற்றி விசாரித்தேன். பின்பு காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சொன்னேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை இல்லை.

**மறு விசாரணை – இல்லை**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.02.17 10:22:35 +0530

Judicial Magistrate No.II
Dindigul.